Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk

TUESDAY, APRIL 01, 2025

செவ்வாய்க்கிழமை ஏப்ரல் 01, 2025 | ஒளி: 10 கதிர் 191 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE



## மோடி-அனுர நிகழ்ச்சி நிரலில்

# “13 இல்லை”

■ *எஸ். தில்லைநாதன்*

இலங்கைக்கு விஜயம் செய்யும் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுக்கும் இடையிலான கலந்துரையாடல் நிகழ்ச்சி நிரலில், நான் அறிந்த வகையில், அரசியலமைப்பின் 13வது திருத்தம் தொடர்பாக எதுவும் குறிப்பிடப்படவில்லை என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

உள்நாட்டுப் போரின் போது, படைத் தரப்பாலும் விடுதலை புலிகளாலும் புலிகளுக்கு எதிராக வடக்கை மையப்படுத்தி செயல்பட்ட அமைப்புகளாலும் பல்வேறு முரணான செயற்பாடுகள் இடம்பெற்றன. இவை பொய்யல்ல. போர் ஒன்றின் போது அவ்வாறு (மனித உரிமைகள், விதிகள் மீறல்) இடம்பெறும் என்றார்.

“மாகாண சபை முறைமை குறித்து இந்தியா எனக்குக் கூற வேண்டிய அவசியம் கிடையாது. எனினும், நாம் உறுதியளித்தபடி மாகாண சபை தேர்தலை நடத்துவோம்” என்றும் அவர் கூறியுள்ளார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், யாழ்ப்பாணத்தில், தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை தனியார் விடுதி ஒன்றில் ஞாயிற்றுக்கிழமை (30) அவர் சந்தித்தார். அதன் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், போரின் போது மனித உரிமைகள், விதிகள் மீறல் இடம்பெறும். இது தொடர்பில் உள்நாட்டில் உள்நாட்டு மக்களின் பங்களிப்புடன் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

தொடர்ச்சி P2



## தங்க விலை எகிறியது

தங்கத்தின் விலை என்றுமில்லாத வகையில், அதிரடியாக அதிகரித்துள்ளது. அதனடிப்படையில், மார்ச் 31 ஆம் திகதிய நிலவரத்தின் பிரகாரம், 22 கெரட் ஒரு பவுன் தங்கத்தின் விலை 236,300 ரூபாயாகும். 24 கெரட் ஒரு பவுன் தங்கத்தின் விலை 257,750 ரூபாயாகும்.

## தமிழ்மிரர் மின்னிதழில் படங்களை தொட்டால் பேசும்

கொழும்பு - 02 ஹுணுபிட்டிய குறுக்கு வீதியில் உள்ள எமது விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தினால், திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை தமிழ்மிரர் மின்னிதழ் வடிவமைக்கப்பட்டு, வெளியிடப்படுகின்றது.

அவை, மின்னஞ்சல் மற்றும் எமது சமூக ஊடகங்களின் ஊடாக அனுப்பிவைக்கப்படுகின்றது. இந்நிலையில், இன்றைய, ஏப்ரல் 1ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மின்னிதழிலில் உள்ள படங்களை, தொட்டால் அந்த படங்கள் பேசும். அந்த வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## நோன்பு பெருநாள் தொழுகை...

உலகவாழ் முஸ்லிம்கள், நோன்பு பெருநாளை திங்கட்கிழமை (31) கொண்டாடினர். இலங்கையிலும் பொது இடங்களில் நோன்பு பெருநாள் விசேட தொழுகை இடம்பெற்றது. காலிமுகத்திடலில், இடம்பெற்ற விசேட தொழுகையின் போது

(மேலதிக படங்கள், பக்கம் 5)



## தேசபந்து தென்னக்கோன் விரைவில் இராஜினாமா?

கட்டாய விடுமுறையில் இருக்கும் பொலிஸ் மா அதிபர் (ஐ.ஜி.பி) தேசபந்து தென்னகோனுக்கு எதிரான பிரேரணை விவாதத்திற்கு வருவதற்கு முன்பு அவர் தனது பதவியை ராஜினாமா செய்வதற்கான ஏற்பாடுகள் நடந்து வருவதாக நம்பகமான வட்டாரங்கள் மூலம் அறியப்பட்டுள்ளது.

தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அவர் பதவியில் இருந்து நீக்கப்படுவதற்கு முன்பு ராஜினாமா செய்வதன் மூலம் சிறிது மரியாதை பெற முடியும் என்று அவரது நண்பர்கள் தேசபந்து தென்னகோனிடம் சுட்டிக்காட்டியதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தொடர்ச்சி P2

## விளக்கமறியலில் வைக்கப்பட்ட
# பெண் வழக்கறிஞர் விடுவிக்கப்பட்டார்



நீதிபதியை மரியாதையுடன் விளக்காமை மற்றும் நீதிமன்ற அறைக்குள் நுழையும் போது தலைவணங்காதது ஆகிய குற்றச்சாட்டின் பேரில், தனது பிணை நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறியதற்காக புத்தளம் மேல் நீதிமன்ற நீதிபதி நதி அபர்ணா சுவனதுருகொடவால் விளக்கமறியலில் வைக்கப்பட்ட வழக்கறிஞரை உடனடியாக விடுவிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம், திங்கட்கிழமை(31) உத்தரவிட்டது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி ரஜீவ் அமரசூரிய தாக்கல் செய்த மனு தொடர்பாக, ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழு முன்வைத்த சமர்ப்பிப்புகளை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் சிறப்பு அமர்வு பரிசீலித்தது.

தொடர்ச்சி P2

# “பிரஜைகளை வாழ வைப்பது எமது கடமையாகும்”



எமது நாட்டின் வங்குரோத்து நிலையால் மக்கள் பல இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர். இம்மக்களுக்கு ஆற்ற வேண்டிய பெரும் பணி எம்மத்தியில் இருந்து வருகிறது. பசியாலும் வேதனையாலும் வாடும் மக்களின் வலியையும் கண்ணீரையும் புரிந்து கொண்டு அவர்களுக்கான கடமைகளை நிறைவேற்ற வேண்டியது எமது பொறுப்பாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

மக்களுக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் அமைந்து காணப்படும் IMF இணக்கப்பாட்டை மக்களுக்குச் சாதகமான ஒன்றாக மாற்ற வேண்டும்.

தொடர்ச்சி P2

# “89க்கு விசாரணை; 2009க்கு இல்லை”

■ *வி.ரி. சகாதேவராஜா*



1989 ஆம் ஆண்டு இடம் பெற்ற பட்டலந்தை சித்திரவதை தொடர்பாக பாராளுமன்ற விவாதம் நடக்கிறது. விசாரணை வேண்டுமாம் .ஆனால் 15 வருடங்களுக்கு முன்பு அதாவது 2009 இல் நடந்த தமிழர் படுகொலைக்கு எதுவும் இல்லை. அரசாங்கம் போலிவேசம் போடுகிறது என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார் ..

இவ்வாறு காரைதீவில் ஞாயிற்றுக்கிழமை(30) நடைபெற்ற இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச சபையின் வேட்பாளர் அறிமுக கூட்டத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த தேர்தலின் பொழுது தமிழ் அரசியல் கைதிகள் படிப்படியாக விடுவிக்கப்படுவார்கள் என்று கூறிய அமைச்சர் விமல் ரத்நாயக்க, யாழ்ப்பாணத்தில் பேசிய போது அவர்களை விடுதலை செய்ய முடியாது என்று தெரிவித்திருக்கிறார். இதிலிருந்து அவர்களது வேஷம் என்ன என்பதை மக்கள் அறிய வேண்டும். என்றார்.

தொடர்ச்சி P2

Trace-it

## டிஜிட்டல் உள்ளடக்க அங்கீகாரத்தை
# ‘Trace-it’ வழங்குகிறது

தற்போதைய AI கருவிகளால் எந்தவொரு வெளியீட்டையும் குறிப்பிடத்தக்க வகையில் எளிதாக மீளுருவாக்கவும், சிதைக்கவும் முடியும். இது பகிரப்பட்ட வெளியீடுகளின் மீதான நம்பிக்கையற்ற கண்ணோட்டத்தை மேலும் வலுவூட்டுகின்றது. தாங்கள் பார்த்துக்கொண்டு இருப்பது திரிபுபடுத்தப்பட்ட AI சார்ந்த மறுவுருவாக்கம் அல்ல என்பதை பார்வையாளர்கள் எவ்வாறு உறுதிப்படுத்திக்கொள்வார்கள்?

தொடர்ச்சி P2

# பால் தேநீர் எகிறியது



பால் மாவின் விலை அதிகரிப்பால், பால் தேநீரின் விலை, பால் சார்ந்த பழச்சாறுகள் மற்றும் பாலாடைக்கட்டி (சீஸ்) ஆகியவற்றின் விலைகள் திங்கட்கிழமை (31) நள்ளிரவு 12 மணி முதல் 10 ரூபாவால் அதிகரிக்கப்படும் என்று அகில இலங்கை சிற்றுண்டிசாலைகள் மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் (AICROA) ஹர்ஷனா ருக்ஷன் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது,

பால் மாவின் விலை உயர்வைக் கருத்தில் கொண்டு, பால் தேநீர் தவிர, பாலைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் அனைத்து வகையான பழச்சாறுகளின் ஒரு கோப்பையின் விலை 10 ரூபாயால் அதிகரிக்கப்படும்.

இது தவிர, பாலைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் பாலாடைக்கட்டி (சீஸ்), உள்ளிட்ட பல வகையான உணவுப் பொருட்களின் விலையும் 10 ரூபாவால் உயர்த்தப்படும் என்று சங்கத்தின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போது கீரி சம்பா மற்றும் சம்பா அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், இதன் காரணமாக உணவக உரிமையாளர்கள் கடுமையான சிரமங்களை எதிர்கொள்டு வருகின்றனர்.

தற்போதுள்ள பற்றாக்குறை காரணமாக, வணிகர்கள் இரண்டு வகையான அரிசியையும் கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு வாங்க வேண்டியுள்ளது.

அரிசி விலை உயர்வை அடிப்படையாகக் கொண்டு, உணவுப் பொருட்களின் விலையை உயர்த்தினால், மக்கள் கடுமையான சிரமங்களை எதிர்கொள்வார்கள் என்பதால், உணவுப் பொருட்களின் விலையை உயர்த்த மாட்டோம் என்றும் அறிவித்துள்ளனர்.

அரிசி பற்றாக்குறை மற்றும் அதிக விலைக்கு விற்பனை செய்வது குறித்து நுகர்வோர் விவகார அதிகாரசபை தகவல் தெரிவிக்க நடவடிக்கை எடுத்துள்ளது என்றார்.

PAGE 1 தொடர்ச்சிகள்

# தேசபந்து தென்னக்கோன் விரைவில் இராஜினாமா?

இதற்கிடையில், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் சமர்ப்பிக்கும் பிரேரணையில், நீதிமன்றங்களால் விசாரிக்கப்படும் அல்லது நீதிமன்றங்களால் முடிவு செய்யப்படவிருக்கும் ஒரு விடயத்தைக் குறிப்பிடக்கூடாது என்று பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் கூறுவதால், அந்தப் பிரேரணையை விவாதத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு சட்டத் தடை இருப்பதாக சட்ட வல்லுநர்கள் கூறுகின்றனர்.

மேலும், பரிசீலனையில் உள்ள விஷயத்திற்கு எதிராக விதிகளை மீறிப் பேசும் எந்தவொரு உறுப்பினரையும் தனது இருக்கையில் அமருமாறு உத்தரவிட சபாநாயகர் அல்லது தலைமை தாங்கும் உறுப்பினருக்கு அதிகாரம் உள்ளது என்றும் நிலையியற் கட்டளைகள் கூறுகின்றன.

தேசபந்து தென்னகோனை ஐ.ஜி.பி பதவியில் இருந்து நீக்குவதற்கான பிரேரணையை நிறைவேற்றுவதற்கு முன், ஐ.ஜி.பி மீதான குற்றச்சாட்டுகளை விசாரிக்க மூன்று பேர் கொண்ட குழுவை நியமிக்கும் பிரேரணை 8 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அந்த முன்மொழிவு ஏற்கனவே பாராளுமன்றத்தின் சமீபத்திய நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டுள்ளது. நிலையியற் கட்டளைகளின்படி, குழுவை நியமிக்கும் முன்மொழிவு பாராளுமன்றத்தில் 113 வாக்குகளால் நிறைவேற்றப்பட வேண்டும்.

# ‘Trace-it’ வழங்குகிறது

வெரிட்டே ரிசர்ச்சின் ஒரு பிரிவான வெரிட்டே மீடியா, ‘ட்ரேஸ்-இட்’ (Trace-it) எனப்படும் ஓர் எளிமையான QR குறியீடு அடிப்படையிலான வெளியீட்டுமுறையை முன்னெடுத்துள்ளது. ஒரு டிஜிட்டல் கைரேகையாக விளங்கும் இது, குறிப்பிட்ட வெளியீட்டின் உண்மையான மூலாதாரத்தை அணுகுவதற்கு வழிவகுப்பதோடு அதன் நம்பகத்தன்மையை உடனடியாக சரிபார்ப்பதற்கு ஊடக பயனர்களுக்கு உதவுகிறது).

நம்பிக்கைக்குரிய வெளியீட்டாளர்கள் இந்த முறையை ஒரு வெளியீட்டுத்தரமாக ஏற்றுக் கொள்ளும் போது, அனைத்து நம்பகமான டிஜிட்டல் முறையிலான உள்ளடக்கங்கள் / வெளியீடுகளின் உண்மையான வெளியீட்டாளர்களை அணுகுவதற்கு ஏதுவாக அமைவதோடு, திரிபுபடுத்தப்பட்ட வெளியீடுகளின் பரவல் கண்டறியப்பட்டு குறைக்கப்படும் என வெரிட்டே மீடியா குழுவின் தலைவர் தீபாஞ்சலி அபேவர்தன விளக்கியுள்ளார்.

ஏப்ரல் மாதம் முதல், வெரிட்டே ரிசர்ச் மூலம் டிஜிட்டல் முறையில் வெளியிடப்படும் உருவகப்படுத்தப்பட்ட மற்றும் ஆவணப்படுத்தப்பட்ட அனைத்து வெளியீடுகளிலும் ‘டிரேஸ்-இட்’ QR குறியீட்டின் டிஜிட்டல் கைரேகை காணப்படும்.

இந்தப் பொதுப்படுத்தப்பட்ட ‘டிரேஸ்-இட்’ தரநிலையை ஏற்றுக்கொண்டு பயன்பெறுமாறு அனைத்து நம்பிக்கைக்குரிய வெளியீட்டாளர்களையும் வெரிட்டே மீடியா ஊக்குவிக்கிறது. இந்த எளிய அங்கீகார முறையை செயற்படுத்துவது தொடர்பில் உதவிகோரும் நம்பகமான வெளியீட்டாளர்களுக்கு உதவதயாராக உள்ளதாக, வெரிட்டே மீடியா குழுவின் செயற்திட்டத் தலைவர் றொஷல் கனக சபை உறுதிப்படுத்தியுள்ளார்.

பதிப்பாளரின் உண்மையான வெளியீட்டுப் பக்கங்களைக் கண்டறிய முடியாத வெளியீடுகள் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறும் ஊடகப் பயனர்களை வெரிட்டே மீடியா கேட்டுக்கொள்கிறது. ஏனெனில் அவ்வாறான வெளியீடுகள் பெரும்பாலும் திரிபுபடுத்தப்பட்டவையாகவோ அல்லது போலியானவையாகவோ இருப்பதற்கான அதிகவாய்ப்புகள் உள்ளன. அத்தகைய வெளியீடுகளை பகிர்வது போன்ற ஆரோக்கியமற்ற நடத்தைகளைத் தவிர்க்குமாறு ஊடகப்பயனர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

‘டிரேஸ்-இட்’ என்பது வெரிட்டே மீடியாவின் பொறுப்புடன் கூடிய பகிர்வு மற்றும் தகவல் சரிபார்ப்பை ஊக்குவிப்பதற்கான பரந்த அர்ப்பணிப்பின் ஒரு பகுதியாகும். வெரிட்டே மீடியா என்பது, உலகை மறுவடிவமைக்கும் வகையில் அறிவுசார் கண்ணோட்டத்துடன் பல்துறை அடிப்படையில் இலங்கையை தளமாகக்கொண்டுள்ள ஒரு சிந்தனைக்குழுவான வெரிட்டே ரிசர்ச்சின் ஒரு பிரிவாகும்.

# விடைத்தாள் மதிப்பீடு ஆரம்பம்

நடந்து முடிந்த கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு பணிகள், இன்று (01) ஆரம்பமாகும் என இலங்கை பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

1066 மத்திய நிலையங்களில் இந்த மதிப்பீடு பணிகள், ஏப்ரல் 1ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு, ஏப்ரல் 10ஆம் திகதி வரையிலும் முதலாம் கட்டம் முன்னெடுக்கப்படும் என்று அறிவித்துள்ளது. அதற்காக, 16 ஆயிரம் ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்றும் அறிவித்துள்ளது.

# “13 இல்லை”

சில நாடுகளால் விதிக்கப்படும் தடைகளால் இந்தப் பிரச்சினையை தீர்க்க முடியும் என நான் நினைக்கவில்லை. இதனால் நாட்டில் உள்ள இனவாதிகளுக்கு சாதகமான நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்திய பிரதமர் நரேந்தி மோடி இலங்கைக்கு வருகை தருவது நல்ல விடயமாகும். அவர் உத்தியோகபூர்வ பயணமாக இலங்கைக்கு வருகை தரவுள்ளார். திருகோணமலையில் சூரிய மின் திட்டம், வடக்கு ரயில் பாதைக்குரிய சமிக்ஞைகள் பொருத்தல் ஆகியவற்றை ஆரம்பிப்பதற்காக அவர் வருகை தரவுள்ளார். மாகாண சபை முறைமை என்பது உள்நாட்டுப் பிரச்னையாகும். அதை இந்தியா எனக்குக் கூற வேண்டிய அவசியம் கிடையாது. மாகாண சபை முறைமையை நடைமுறைப்படுத்துவோம் என நாம் எமது கொள்கை பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ளோம். உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நிறைவடைந்தவுடன் பெரும்பாலும் இந்த வருடத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்த எதிர்பார்க்கிறோம். நாம் ஏற்கனவே மக்களுக்கு உறுதியளித்துள்ளோம். ஆகையால், அதை இந்தியாவுடன் கலந்துரையாட வேண்டிய தேவை கிடையாது. நான் அறிந்த வரையில் 13ஆவது திருத்தம் தொடர்பில் எமது ஜனாதிபதிக்கும் இந்திய பிரதமருக்கும் இடையே நடைபெறும் கலந்துரையாடல் நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படவில்லை - என்றும் கூறினார்.

# பெண் வழக்கறிஞர் விடுவிக்கப்பட்டார்

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு முறையான நடைமுறை இருந்தாலும், வழக்கறிஞருக்கு எதிராக குற்றச்சாட்டுகளை தாக்கல் செய்யும் போது உயர் நீதிமன்ற நீதிபதி அந்த நடைமுறையைப் பின்பற்றவில்லை என்று சுட்டிக்காட்டி, புத்தளம் உயர் நீதிமன்ற நீதிபதியால் விளக்கமறியலில் வைக்கப்பட்ட வழக்கறிஞரை உடனடியாக விடுவிக்க உத்தரவிட்டது.

புத்தளம் மேல் நீதிமன்ற நீதிபதி விதித்த பிணை நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறியதற்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த புத்தளம் மேல் நீதிமன்றத்தின் வழக்கறிஞர் திருமதி பிரியங்கா உதயங்கனி சமரதுங்கவை உடனடியாக விடுவிக்க மேல்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டதுடன், ஏப்ரல் 28 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் உத்தரவிட்டது.

# “பிரஜைகளை வாழ வைப்பது எமது கடமையாகும்”

மக்களை வாழ வைப்பது எமது கடமையாகும். இதனை நிறைவேற்ற நாம் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

சமாதான நீதவான், கொரிகஸ்வெவ சந்திரரதன நாயக்க தேரருக்கு மல்வத்து பீடத்தின் மகாசங்கத்தினரின் ஆசியுடன் இரண்டாம் சங்கநாயக பதவிப் பத்திரம் மற்றும் கௌரவப் பட்டம் வழங்கும் நிகழ்வில் திங்கட்கிழமை (31) கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நாட்டிற்கு மக்களினது பிரச்சினைகளை விளங்கிக்கொள்ளும் தலைவர் ஒருவர் தேவை. துன்பப்படும் மக்களை விடுவிக்கும் பொறுப்பை எந்தவித பின்வாங்கலும் இன்றி நிறைவேற்ற வேண்டும். வங்குரோத்து நிலையில் இருந்து மீளும் பயணத்தில் பெரும் செல்வந்தர்கள் அதிக சுமைகளைச் சுமக்க வேண்டும். துன்புறும் மக்களுக்கான எமது பொறுப்பை சரியாக நிறைவேற்றி அனைவரும் வாழக்கூடிய தாய்நாட்டை கட்டியெழுப்ப வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

# “1989 விசாரணை: 2009க்கு இல்லை”

2024 தேர்தலில் யாழ்ப்பாணத்தில் மூன்று எம்பிக்களை பெற்றுக் கொண்ட திமிரில் அரசாங்கம் இன்று ஆனையிறவு உப்புக்கு றஜலுணு என பெயரிட்டுள்ளது. தமிழர்களின் அபிலாசை இதுவா? என்று கேட்கின்றோம். நிரந்தரமான அரசியல் தீர்வு ஒன்றுதான் எமது அபிலாசை. பாருங்கள் இன்று உப்பின் பெயரே பிரச்சினையாக இருக்கிறது .

இதற்கெல்லாம் அரசாங்க தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் வாய் திறக்க மாட்டார்கள். அவர்களால் வாய் திறக்க முடியாது. அவர்களுக்கு பாராளுமன்றத்தில் பேசுவதற்கு கூட நேரம் ஒதுக்கவில்லை.

இந்த நிலையில் எமது அபிலாசைகளை உரிமைகளை அவர்களால் பெற்றுத்தர முடியுமா? முடியவே முடியாது.

2020 ஆம் ஆண்டு அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் தங்களது பிரச்சனை எல்லாம் தீரும் என்று ஒருவருக்கு வாக்களித்தார்கள். அவ்வளவுதான் இன்று வரை அவரைக் காணவில்லை. ஆசனமும் இழக்க பட்டது. எனினும் தமிழ் மக்கள் உரிமைக்கான ஒரே கட்சி தமிழரசுக் கட்சி என்ற ரீதியில் கிடைத்த ஒரே ஒரு தேசிய பட்டியல் ஆசனத்தை கலையரசனுக்கு வழங்கினோம். அவர் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தொடக்கம் பல அம்பாறை தமிழர் பிரச்சனைக்கு குரல் கொடுத்தார்.

அதேபோன்று 2024 ஆம் ஆண்டு தேர்தலில் மட்டக்களப்பில் மூன்று ஆசனங்களை நாம் பெற்றதை விட அம்பாறையில் ஒரு ஆசனம் பெற்றது எமக்கு சந்தோஷமாக இருந்தது . கல்முனை வடக்கு பிரச்சினையை பாராளுமன்றத்தில் எடுத்தால் அரசாங்கம் இன்னும் வாய் திறப்பதில்லை.

அதிகாரங்கள் உள்ளூராட்சியில் இருந்து கிளம்ப வேண்டும். வடக்கு கிழக்கிலே முதலாவது தமிழரசுக் கட்சியின் அறிமுக கூட்டம் காரைதீவில் நடைபெறுகிறது. எனவே முதலாவது வெற்றியும் இங்கிருந்துதான் ஆரம்பமாகும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை .

அது அவ்வாறிருக்க அண்மையில் மூன்று பேர் சேர்ந்து ஒரு கூட்டமைப்பை உருவாக்கினார்கள்? மூவரில் ஒருவர் இப்பொழுது சிறைச்சாலையில் இருக்கிறார் . மற்றவருக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் தடை விதித்திருக்கிறது.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் நடந்து ஆறு வருடங்கள் ஆகின்றன. அந்த ஆறு வருட பூர்த்தியாக முன்பே மூன்றாவது தலைவருக்கு எதுவும் நடக்கலாம். மொத்தத்தில் தலைவர் இல்லாத கூட்டணி இருக்கப் போகிறது என்பதுதான் பரிதாபம் .

இந்த கருணாவுக்கு எல்லாம் பதில் அளிக்க வேண்டாம் என்று பலரும் சொன்னார்கள். இந்த கூட்டமைப்பால் தமிழரசுக் கட்சி பயந்து போயிருக்கிறதாம். ஒருவர் சொன்னார் . இந்த கூட்டமைப்பால் தமிழரசுகட்சி பயப்படவில்லை. ஆனால் இது சாரார் பயப்படுகின்றார்கள்.

ஒரு சாரார் மட்டக்களப்பில் வடி வடிப்பவர்கள். ஏனென்றால் அதைவிட குடிகாரன் அவர். அதேபோன்று பெண்கள் பயப்படுகிறார்கள். ஏனெனில் அவர் பெண் கள்வனாம்.

என்னைக் கைது செய்ய வேண்டும் என்று சொல்கிறார்.

ஒரு வரவு- செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டால் அது மாவட்ட செயலகத்திற்கு வந்து பின்னர் பிரதேச செயலகத்திற்கு வந்து செலவழிக்கப்படும். இதில் யார் எப்படி மோசடி செய்வது?

அப்படி என்ன கைது செய்வதாக இருந்தால் இங்குள்ள சகல பிரதேச செயலாளர்களையும் அரசாங்க அதிபரையும் நிதி அமைச்சரையும் ஏன் ஜனாதிபதியையும் கைது செய்ய வேண்டும்.

அரசியலில் உச்சத்திற்கு போவதாக இருந்தால் சிறைச்சாலைக்கு போய் வர வேண்டும் என்று சொல்வார்கள். பொறுத்திருந்து பார்ப்போம் என்றார்.

# “சிவில் நிர்வாகத்தில் இராணுவமயம் வேண்டாம்”

அதிகாரத்தில் இருக்கும் அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர்கள் உரிய நிர்வாக ஒழுங்குகளுக்குள்ளாக கடமைகளை திணைக்களங்களுக்கு அறிவுறுத்தி அவற்றின் வாயிலாக மக்களுக்கு சேவையை பெற்றுக் கொடுக்க வேண்டுமே தவிர இராணுவத்தைப் பயன்படுத்தி சாதாரண சிவில் நிர்வாகத்தின் செயல்திறன் குன்றியதாக மாற்றக்கூடாது. இராணுவமயமாக்கத்தை ஊக்குவிக்க கூடாது என வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.



யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தலைமையில், இராணுவ குழுக்கள் இணைந்து-தூய்மையாக்கும் பணியில் ஈடுபட்டமை குறித்து தனது அதிருப்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் மக்களையோ அல்லது கட்சித் தொண்டர்களை ஈடுபடுத்தி யாழ் மத்திய பேருந்து நிலையம் தூய்மையாக்கப்பட்டிருக்குமாயின் நாம் அதனை வரவேற்றிருப்போம். மாறாக அரச அதிகாரத்தின் வாயிலாக, இராணுவத்தினை பெருமளவில் அழைத்து வந்து யாழ் மாநகர சபை ஆற்ற வேண்டிய தூய்மிப்புப் பணியை அரச எம்.பி இளங்குமரன் மேற்கொண்டுள்ளார்.

தங்களிடத்தில் யாழ். மத்திய பேருந்து நிலையத்தை துப்புரவு செய்ய வேண்டிய நன்நோக்குக் காணப்படுமாயின் தங்கள் கட்சி ஆட்சியில் உள்ள அரசாங்கம் என்பதன் அடிப்படையில் சாதாரணமாக அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தபட்டிருந்தால் அவர்கள் சிவில் நிர்வாக ஒழுங்கு முறைகளுக்கு அமைவாக பொறுப்பு வாய்ந்த திணைக்களங்களின் ஒத்துழைப்புடன் மேற்படி நடவடிக்கையினை மேற்கொண்டு இருக்க முடியும். யாழ் மாநகர சபையில் ஆளணி வளம் உள்ளது. யாழ் மாநகர சபை பாராளுமன்ற உறுப்பினரின் கோரிக்கைக்கு செவி சாய்க்கவில்லையானால் ஆளுநர், மாகாண உள்ளூராட்சி திணைக்கள-விடயங்களுக்கு அதிகாரம் பொருந்தியவராக உள்ளார். அவர் ஊடாக நடவடிக்கை எடுத்திருக்கலாம். இவற்றுக்கு மேலதிகமாக பொதுமக்களை திரட்டி அல்லது கட்சித் தொண்டர்கள் ஊடாக சிரமதானத்தில் ஈடுபட்டிருக்கலாம். ஆனால் அப்படிச் செய்யாது பெருமளவான இராணுவத்தினரைப் பயன்படுத்தி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளீர்கள். இராணுவத்தினரை சிவில் நிர்வாகம் ஊடக மேற்கொள்ள வேண்டிய பணிகளில் தவிருங்கள்.

கடந்த கோட்டபய காலத்திலும் இராணுவத்தினை உள்ளூராட்சி விடயப்பரப்புகளுக்குள் நுழைப்பதற்கு பெரும் பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் நான் உள்ளூராட்சி மன்றம் ஒன்றின் தலைவர் என்ற வகையில் அவற்றை முற்றாக நிராகரித்திருந்தேன்.

நீங்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் இராணுத்தின் தயவில் இயங்கினால் தங்கள் கட்சி சார்ந்த எதிர்காலத்தில் தெரிவாக கூடிய உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் சபைகளில் சிறிய வேலைகளை செய்வதற்கும் இராணுத்தினையே அழைக்க எத்தனிப்பர். எனவே இராணுவ ஒடுக்குமுறைகளுக்கு இனமாக உட்பட்டிருக்கும் எமது இனத்திற்கு இன்றுவரையில் தங்கள் கட்சி ஆரோக்கியமான பொறுப்புக்கூறல் அல்லது-தீர்வை முன்வைப்பதற்கு முன்வரவில்லை. இவ்வாறிருக்க சாதாரண விடயங்களிலும் இராணுவ பிரசன்னத்தையும் இராணுவமயமாக்கத்தினையும் மேற்கொள்வது எமது மக்களை மேலும் ஒடுக்குமுறைக்கு உள்ளாகும் செயற்பாடாகும் என்றார்.

## நான்கு நாட்களில் தபால் வாக்குச்சீட்டு

மே 6ஆம் திகதியன்று நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்புக்கான வாக்குச்சீட்டுகளை அச்சிடும் பணிகள், ஏப்ரல் 5ஆம் திகதி நிறைவடையும் என அரச அச்சகம் அறிவித்துள்ளது.

அதன்பின்னர், உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகளை அச்சிடும் பணிகள் ஆரம்பிக்கப்படும். அதன்பின்னர், வாக்குச்சீட்டுகள் அச்சிடும் பணிகள் ஆரம்பிக்கப்படும். அதற்காக சகல மாவட்டங்களில் இருந்தும் தகவல்கள் கிடைத்துள்ளன.

## தமிழ்மிரர் மின்னிதழில்...

எமது வாசகர்கள் அந்த படங்களை தொட்டு பார்த்திருப்பீர்கள் என நினைக்கின்றோம். அந்த படங்கள் பேசவில்லை என்றால், மீண்டும் மீண்டும் தொட்டுப்பாருங்கள், ஏனென்றால், இன்று (01) ஏப்ரல் 1ஆம் திகதியாகும். பலரும் மறந்தே விட்டிருப்பீர்களே.










## யாழ். - திருச்சி விமான சேவை ஆரம்பம்...

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திற்கும் திருச்சி விமான நிலையத்திற்கும் இடையிலான விமான சேவைகள் ஞாயிற்றுக்கிழமை (31) முதல் ஆரம்பமாகியுள்ளன.

திருச்சியில் இருந்து மதியம் புறப்பட்ட விமானம், யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த வேளை, விமான நிலையத்தில் வரவேற்பளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் இந்திய கான்சல் ஜெனரல் சாய் முரளி உள்ளிட்ட துணைத் தூதரக அதிகாரிகள், விமான நிலைய அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த விமான சேவையானது தினசரி மதியம் 1.25 மணிக்கு திருச்சியில் இருந்து புறப்பட்டு 2.25 மணியளவில் யாழ்ப்பாணத்தை வந்தடையும். யாழ்ப்பாணத்தில் இருந்து மாலை 3.15 மணிக்குப் புறப்பட்டு திருச்சியை மாலை 4 மணியளவில் சென்றடையும்.

அதேவேளை, யாழ்ப்பாணத்தில் இருந்து சிங்கப்பூர் பயணிக்க விரும்புவோர் திருச்சி சென்று திருச்சி ஊடாக சிங்கப்பூர் பயணிக்க கூடியவாறான விமான சேவை திட்டமிடப்பட்டுள்ளமையால் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்குச் சென்று சிங்கப்பூர் செல்வதற்கான நேர விரயம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.



### தமிழ் மக்கள் கூட்டமைப்பில் இணைந்துள்ள

# “ஊழல்வாதிகளை ஏற்க் மாட்டார்கள்”

■ பரின்பராஜா சபேஷ்

கடந்த காலங்களில் ஆட்சி செய்த பேரினவாத அரசாங்கங்களுடன் இணைந்து தமிழ் மக்களை அழித்து அவர்களது போராட்டத்தை முடக்கிய ஊழல்வாதிகள் தமிழ் மக்கள் கூட்டமைப்பில் ஒன்றிணைந்துள்ளார்கள். இவர்களை தமிழ் மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இளையதம்பி சிறிநாத் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு வந்தாறுமூலையிலுள்ள அவரது அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை (30) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் ,

“பட்டலந்த சித்திரவதை முகாம் தொடர்பாக பேசப்படும், அதேவேளை வடக்கு கிழக்குப் பகுதிகளில் பல சித்திரவதை முகாம்கள் இராணுவத்தினால் நடத்தப்பட்டிருந்தன. பல படுகொலைகள் நிகழ்தேறி. வெள்ளைக் கொடியேந்தி வந்தவர்கள் கூட கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டிருந்தார்கள். அப்பாவி பொதுமக்கள் சிறுவர்கள் படுகொலை செய்யப்பட்ட காணொளிகள் வெளிவந்திருந்தன .இவ்விடயங்கள் தொடர்பாக நீதி வேண்டி உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் பல்வேறு அழுத்தங்களை பிரயோகித்து வந்துள்ளோம்.



படுகொலைகள் குற்றங்கள் இழைத்தவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் நீதிச் செயற்பாடுகள் நேர்மையாக முன்னெடுக்கப்பட வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான உரிய தீர்வுக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். என்பதே எமது நிலைப்பாடாகும். பட்டலந்த ஆணைக்குழு போன்ற, வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடைபெற்ற படுகொலைகள், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதியான விசாரணை நடைபெற்று அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். அவ்வாறு நீதியான தீர்ப்புகள் வழங்கப்படும் போது எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள்; நடைபெறுவதை தடுக்க முடியும்.

மட்டக்களப்பின் வாகரைப் பகுதியிலும் வடக்கின் இறுதி யுத்தத்தின் போதும் எவ்வாறு தமிழ் மக்கள் கொத்துக் கொத்தாக கொலை செய்யப்பட்டார்கள் ,காணாமல் ஆக்கப்பட்டுக்களார்கள், இவற்றுக்கான நீதிப் பொறிமுறைகூட இழுத்தடிப்பு செய்யப்பட்டு அதற்கான உத்தரவாதம் கூட வழங்கப்படாத நிலை ஏற்பட்டுள்ளது. நீதி கோரிய மனித உரிமை அடிப்படையிலான போராட்டங்களுக்கு எங்களுடைய ஆதரவு எப்போதும் இருக்கும்.

தமிழ் தேசியத்தை சிதைத்து விடுவதற்கான செயற்பாடுகள் தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. எமது அரசியல் பயணம் வடக்கு கிழக்கு சார்ந்தே இருக்கிறது. காலத்துக்கு காலம் கிழக்கு கூட்டணி போன்ற சில கிழக்கு அமைப்புகள் கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் மக்களின் அரசியல் பலத்தை சிதைத்து விடுவதற்காகவும் ஆளுமையை இல்லாமல் செய்வதற்கான நடவடிக்கையாகவே நாம் கருத வேண்டியுள்ளது.

வடகிழக்கில் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த வரலாறு,மொழி, கலாசாரம் உள்ளது. கிழக்கு மாகாணத்தினை நாம் தனித்து விடுவோமானால் தமிழ் மக்களுக்குரிய எழுச்சி இன விகிதாசாரம் பாதுகாப்பு மிகக் கேள்விக்குறியாகவே உள்ளது. கிழக்கு மாகாணத்தில் கடந்த காலத்தில் ஆட்சி செய்த இனவாத அரசாங்கங்கள் பல்வேறுபட்ட செயற்பாடுகள் மூலம் அம்பாறையிலும் திருகோணமலையிலும் பாரியளவு குடியேற்றங்களை அமைத்து, இன விகிதாசார பரம்பலை மாற்றியமைத்து, கிழக்கில் தமிழர்கள் பெரும்பான்மையாக இல்லாத சூழலை உருவாக்கியுள்ளார்கள்.

இந்த நிலையில் கிழக்கு தமிழ் கூட்டமைப்பு என கூறிக்கொண்டு தமிழ் மக்களின் வாக்குகளை சிதைத்து விடும் செயற்பாடானது தமிழ் மக்களின் அரசியல் பேரம் பேசும் பலத்தை சிதைத்துவிடும் செயற்பாடாகவே அமையும். கடந்த காலங்களில் பேரினவாத அரசுகளுடன் இணைந்து தமிழ் மக்களை அழித்து அவர்களது போராட்டத்தை முடக்கிய ஊழல்வாதிகள் தமிழ் மக்கள் கூட்டமைப்பில் ஒன்றிணைந்துள்ளார்கள். இவர்களை தமிழ் மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். தமிழ் மக்கள் கடந்த பொதுத் தேர்தலில் தெளிவான முடிவெடுத்து, தமிழ் தேசியத்தை வெல்ல வைத்தார்கள் அதே போன்று நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலிலும் எதிரொலிக்கும்.

தமிழ் தேசிய கட்சிகளுடன் அரவணைத்துக் கொண்டு உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை எதிர்கொள்வது என்றும் அவர்கள் விரும்பினால் இணையலாம் என இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் தெளிவாக முடிவெடுக்கப்பட்டது.

முஸ்லிம் காங்கிரசுடன் அல்லது வேறு எவருடனோ இணைவது தொடர்பாக எவ்விதமான முடிவுகளும் எடுக்கப்படவில்லை. எமது மக்களை குழப்புவதற்காக தமிழ் தேசியத்தை சிதைக்கும் சில சக்திகள் நாங்கள் முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து போட்டியிடுகிறோம் என போலி பிரச்சாரங்களை முன்னெடுத்து வருகின்றனர்.” என்றார்.

## பேராதனை விபத்தில் இருவர் பலி

பேராதனை பொலிஸ் பிரிவின் எடதுவாவ பகுதியில் முச்சக்கர வண்டி ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த இருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் இருவர் காயமடைந்துள்ளதாக பேராதனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து திங்கட்கிழமை (31) அதிகாலையில் நிகழ்ந்ததாகவும், விபத்துக்குள்ளான முச்சக்கர வண்டியில் பயணித்தவர்கள் பேராதனை பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

காயமடைந்த இருவரும் சிகிச்சைக்காக பேராதனை போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர், சம்பவம் குறித்து விசாரணைகளை பேராதனை பொலிஸார் நடத்தி வருகின்றனர்.

## 16 கஞ்சா செடிகளுடன் ஒருவர் கைது

■ என். ஆரச்சி

யட்டியாந்தோட்டை,ஹக்பெல்லவக பிரதேசத்தில் 16 கஞ்சா செடிகளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக யட்டியாந்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

பூகொடை பொலிஸ் சிறப்பு அதிரடிப்படை அதிகாரிகள் மற்றும் எட்டியாந்தோட்டை பொலிஸார் இணைந்து ஞாயிற்றுக்கிழமை (30) மாலை மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது யட்டியாந்தோட்டை, ஹக்பெல்லவக, பெலெல்லேகம பகுதியில் உள்ள ஒரு வீட்டின் பின்னால் நடப்பட்ட 16 கஞ்சா செடிகள்



கைப்பற்றப்பட்டுள்ளன.

இச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டவர் 53 வயதுடையவர் எனவும் அவர் ருவன்வெல்ல நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தவுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்



## கேரள கஞ்சாவுடன் மூவர் கைது

யாழ். சங்குப்பிட்டி பாலத்துக்கு அருகாமையில் உள்ள அரசொல்லை பகுதியில் வைத்து கேரள கஞ்சாவுடன் மூன்று சந்தேக நபர்கள் ஞாயிற்றுக்கிழமை (30) கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய பொலிஸ் விசேட அதிரடி படையினருடன் இணைந்து நடத்திய தேர்தல் நடவடிக்கையின் போது குறித்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இதன்போது 100 கிலோவுக்கு அதிகமான கஞ்சா தொகை மற்றும் வாகனமொன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் வவுனியா பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட கஞ்சாவினை கொழும்புக்கு கடத்துவதற்கு தயாரானதாக சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### விமான பயணியிடம் கைவரிசை:

## வாடகை வாகன சாரதி கைது

■ டிகேஜி.கபில

துபாயிலிருந்து வந்த பயணி ஒருவரின் கைப் பையிலிருந்து ஒன்பது இலட்சத்து நான்காயிரம் ரூபாய் மதிப்புள்ள பணத்தை திருடிய விமான நிலைய வாடகை வாகன சாரதி ஒருவர் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரால் இன்று (31) கைது செய்யப்பட்டார்.

துபாயில் மனிதவள உதவி மேலாளராகப் பணிபுரிந்த கண்டியைச் சேர்ந்த ஒருவர், கடந்த 29 ஆம் திகதி இரவு 9.30 மணிக்கு எமிரேட்ஸ் விமானமான EK-648 மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்தடைந்தார்.

பின்னர் அவர் வீட்டிற்குச் செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து ஒரு வாடகை காரில் சென்றார், தவறுதலாக, அவர் தனது மடிக்கணினி அடங்கிய பையை காரில் விட்டுச் சென்றுவிட்டார்.

பின்னர் அது குறித்து சாரதியிடம் கேட்டபோது, அது அவரது வாகனத்தில் இருப்பதாகவும், அவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்து அதைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, திங்கட்கிழமை (31) காலை அந்த பையை பெற்று தேடிபார்த்த போது, செய்தபோது 904,400 பணம் காணாமல் போயிருந்தது. அதுதொடர்பில், கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரிடம் செய்த முறைப்பாட்டு அமைய, அந்த வாடகை காரின் சாரதி கைது செய்யப்பட்டார்.

## பயணியிடம் கைவரிசை காட்டிய சார்ஜண்ட் கைது

பஸ் நிறுத்துமிடத்தில் நின்று கொண்டிருந்த பயணியை சோதனைக்கு உட்படுத்துதல் எனும் பெயரில், அவருடைய மேற்சட்டை பையில் இருந்து, 21 ஆயிரத்து 540 ரூபாயை களவாடினார் என்ற குற்றச்சாட்டில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர், தெனியாய பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த பொலிஸ் சார்ஜன்ட், இரவு ரோந்து சேவையில் ஈடுபட்டிருந்த போது, பஸ் நிறுத்துமிடத்தில் நின்றிருந்த நபரை, சந்தேகத்தின் பேரில் சோதனைக்கு உட்படுத்தி உள்ளார். அவ்வாறு உடல், உடமை சோதனை மேற்கொண்ட பொலிஸ் சார்ஜன்ட், அங்கிருந்து கிளம்பியுள்ளார். பின்னர், தன்னுடைய மேற்சட்டை பொக்கட்டை தட்டி பார்த்த போது தான் வைத்திருந்த பணம் காணாமல் போனதை உணர்ந்த பயணி, இது தொடர்பாக தெனியாய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். அந்த முறைப்பாட்டுக்கு அமைய, அன்றைய தினம் இரவு ரோந்து சேவையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் சார்ஜன்ட் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

## பெட்ரோல் குண்டு வீச்சில் குழந்தை பலி

வீட்டின் மீது நடத்தப்பட்ட பெட்ரோல் குண்டு தாக்குதலில் காயமடைந்த 05 வயதுடைய குழந்தை ஞாயிற்றுக்கிழமை (30) மாலை உயிரிழந்துள்ளதாக களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை, ராஜாவத்த, கமகொட வீதியில் வசித்து வந்த செனல் சந்தீப என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

கடந்த 29 ஆம் திகதி இரவு 8.50 மணியளவில் நடந்த இந்த சம்பவத்தில் பலத்த தீக்காயங்களுக்கு ஆளான குழந்தை, களுத்துறையில் உள்ள நாகொட போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் பொரள்ளை லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டது. அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் குழந்தை உயிரிழந்தது.

# வெளிப்படுத்தினால் மட்டும் போதாது; தண்டனை அவசியம்

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று தற்கொலை குண்டு தாக்குதல் இடம்பெற்று, இன்னும் 20 நாட்களில் 6 வருடங்கள் நிறைவடையவுள்ளது. எனினும், அன்றைய தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி, நியாயம் கிடைக்க வேண்டும் என்பதில் பல தரப்பினரும் உறுதியாக உள்ளனர். அவ்வாறானவர்களுக்கு ஓரளவுக்கேனும் மன ஆறுதல் தரும் வகையில், உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்களுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களை ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு முன்னர் வெளிப்படுத்துவோம் என ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, மாத்தறை, தெய்யந்தர பகுதியில், ஞாயிற்றுக்கிழமை (30) நடைபெற்ற, தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதி, பாராளுமன்ற தேர்தல்களின் பரப்புரை கூட்டங்களில், நாங்கள் ஆட்சி பீடம் ஏறினால், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்குத் தண்டனை பெற்றுக் கொடுப்போம் என்று உறுதி அளிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர், எதிரணியினரும், நீதி, நியாயத்தை எதிர்பார்த்து இருப்போரும், உயிர்த்த ஞாயிறு சம்பவம் தொடர்பான விசாரணைகளை அரசாங்கம் மறந்து விட்டதாகக் குற்றஞ்சாட்டினர்.

ஒரு சம்பவம் இடம்பெற்றவுடன், யாரையும் உடனடியாக குற்றவாளியாக்க முடியாது, விசாரணைகளின் பின்னர், நீதிமன்ற உத்தரவின் பேரில் குற்றவாளியாக முடியும். அதன் பின்னர், நீதிமன்றமே தண்டனையை வழங்கும். இதுவே பொதுவான நடைமுறையாகும். அதற்கு நீண்ட காலம் எடுக்கும் என்பதே, எமது நீதிமன்ற நடவடிக்கைகளின் அவதானிப்பாகும்.

நமது நாட்டின் நீதித்துறையில், பல்வேறு மனித வள குறைபாடுகள் இருக்கின்றன. இதனால், ஏராளமான வழக்குக் கோவைகள் தேங்கிக் கிடக்கின்றன. எனினும், சர்ச்சைக்குரிய சம்பவங்கள் தொடர்பான வழக்குகளை விரைவாக விசாரித்து முடிக்க வேண்டியது. தேசிய மக்கள் சக்தியின் பொறுப்பாகும்.

இல்லையேல், வழக்குகள் விசாரிக்கப்படாமல், கிடப்பில் போடப்பட்டு, காலம் கடந்து விடும். அதன் பின்னர், புதிய அரசாங்கத்தின் மீது சகலரும் கையை நீட்டுவர். உரிய காலத்தில் விசாரணைகளை முன்னெடுத்து, வழக்குத் தாக்கல் செய்யாமல் அரசாங்கம் காலம் கடத்தி விட்டது என்ற குற்றச்சாட்டுகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில், பலரும் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். எனினும், தாக்குதல்களுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களை அம்பலப்படுத்துவதாகவே ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அம்பலப்படுத்தினால் மட்டும் போதாது, அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் செயற்பாடுகளையும் துரிதப்படுத்த வேண்டும். இல்லையேல், அது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குண்டாக இருந்து விடும். ஏனெனில், நாங்கள் ஆட்சிப் பீடம் ஏறியவுடன் குற்றவாளிகளுக்குத் தண்டனையைப் பெற்றுக் கொடுப்போம் என இன்னும் சில வருடங்களில், எதிர்த்தரப்பினர் கூறக் கூடும். சூத்திரதாரிகளை அம்பலப்படுத்தினால் மட்டும், அவர்களுக்குத் தண்டனையைப் பெற்றுக் கொடுத்தல் மட்டும், உயிர்த்த ஞாயிறு தற்கொலை தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கிடைத்து விடாது. இது ஓர் ஆறுதல் மட்டுமே தரும் என்பதுடன், இவ்வாறான சம்பவங்கள் இனிமேல் இடம்பெறாத வகையில் நடவடிக்கைகள் எடுப்பதே சிறந்தது.




## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136


Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# பலஸ்தீன விவகாரமும் அரசாங்கத்தின் நிலைப்பாடும்

மொஹமட் பாதுஷா

புதிய அரசாங்கம் பயங்கரவாத தடைச் சட்டத்தை எப்போது நீக்கும் என்ற கேள்விக்கு விடை கிடைக்காதிருக்கின்ற நிலையில், பலஸ்தீன் மீதான இஸ்ரேலின் அழிச்சாட்டியம் தொடர்பாக அரசாங்கம் உண்மையிலேயே என்ன நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என்ற கேள்வியும் இப்போது எழுந்திருக்கின்றது.

பலஸ்தீனத்தில் யுத்த நிறுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் மீண்டும் கடுமையான தாக்குதல்களை இஸ்ரேல் மேற்கொண்டு வருகின்றது. புனித நோன்பு காலத்தில் கூட கொத்துக்கொத்தாக முஸ்லிம்கள் கொல்லப்பட்டுக் கொண்டே இருக்கின்றனர். இது இன்று இஸ்லாத்தைப் பின்பற்றாத மக்களையும் கண்கலங்கச் செய்துள்ளது.

இலங்கை போன்ற நாடுகளில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாக உலக அரங்கில் கொக்கரிக்கின்ற பல நாடுகள் இன்று, 'பொலிஸ்' வேடமணிந்த 'கள்வர்களுககு' பின்னால் முட்டுக் கொடுத்துக் கொண்டு நிற்கின்றன. பலஸ்தீன குழந்தைகளும் பெண்களும் தங்களது சொந்த மண்ணிலேயே பலியெடுக்கப்படுவதை வெறும் செய்தியாகவே நோக்குகின்றன.

கடந்த காலங்களில் இதுபோன்ற மனிதப் பேரவலங்கள் இடம்பெற்ற வேளைகளில் அதற்கு எதிராக ஒரு தீர்மானத்தை எடுத்துவிட்டு அல்லது ஒரு கண்டன அறிக்கையை வெளியிட்டுவிட்டு சும்மா இருந்ததைப் போல, ஐ.நா. உள்ளிட்ட உலக அமைப்புக்கள் காசா விடயத்திலும் இஸ்ரேலை கண்டித்து விட்டு வாழாவிருப்பதைக் காண்கின்றோம்.

ஆனால், கடந்த 2023 ஒக்டோபரில் பிரகடனப்படுத்தப்பட்ட யுத்தம் ஆரம்பமாகியதில் இருந்து மட்டுமன்றி, அதற்கு முன்னர் கடந்த அரை நூற்றாண்டாகக் கொன்று குவிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் பலஸ்தீன மக்களுக்காக மனித நேயமுள்ள யாரும் குரல் கொடுக்கவே செய்கின்றனர்.

வேறு மதங்களைப் பின்பற்றும் மக்களே இஸ்ரேலின் அழிச்சாட்டியத்தை எதிர்க்கத் தலைப்பட்டுள்ள ஒரு கால சூழலில், இஸ்லாத்தைப் பின்பற்றுகின்ற மக்கள் இலங்கையிலோ வெளிநாடுகளிலோ எதிர்ப்பைவெளிக்காட்டுவது எந்த வகையிலும் நியாயமானதே.

கொழும்பில் பல்பொருள் அங்காடித் தொகுதி ஒன்றில் பணிபுரியும் ஒரு இளைஞன் இஸ்ரேலுக்கு எதிரான ஸ்டிக்கர் ஒன்றை ஒட்டினான் என்ற குற்றச்சாட்டின் பேரில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இத்தனை வருடங்களாக நியாயங்கள், அநியாயங்கள் பற்றி பாராளுமன்றத்தில் வகுப்பு நடத்திய ஜே.வி.பி. அதாவது, என்.பி.பி. அரசாங்கமே இந்தக் கைதின் நியாயத்தன்மையை உறுதிப்படுத்த வேண்டிய வேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளது.

இந்நிலையில்தான், பொலிஸ் திணைக்களம் சட்டப்படி, ஒரு விளக்கத்தை இப்போது வெளியிட்டுள்ளது. 'அவர் ஸ்டிக்கர் ஒட்டியதைத் தாண்டிய சில அடிப்படைவாத கருத்துக்களைக் கொண்டிருந்தவர்' என்றும் 'அவர் ஏதோ ஒரு வகையில் பயங்கரவாதச் செயலைச் செய்யக் கூடியவர் என்பது விசாரணைகளில் தெரிய வந்ததாகவும்' அதில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

அவர் உண்மையில் பயங்கரவாதத்துடன் தொடர்புள்ளவரா, குற்றவாளியா இல்லையா என்பதை சட்டம் தான் தீர்மானிக்க வேண்டும். இவர் சமூக உணர்வுடன் செய்தாரா? அல்லது பாதுகாப்பு தரப்பு சந்தேகப்படுவது போன்று வேறு தூண்டுதலில் செய்தாரா என்பதைப் பாதுகாப்பு தரப்பு அறிய விரும்பினால் அதனைச் செய்யட்டும்.

ஆனால், மேற்படி இளைஞர் ஸ்டிக்கர் ஒட்டியதற்காகவே ஆரம்பத்தில் கைது செய்யப்பட்டார் என்பது இங்குக் கவனிக்கத்தக்க விடயமாகும்.

இலங்கையில் ஒரு காலத்தில் தமிழர்களுக்கு எதிரான கோஷங்கள் எழுந்தன. கடந்த 15 வருடங்களில் முஸ்லிம் விரோத வாசகங்களும் 'சிங்ஹலே' என்ற ஸ்டிக்கர்களும் பரவலாக ஒட்டப்பட்டன. இதுவெல்லாம் பெரிய விடயங்களாகப் பார்க்கப்பட்டு கைதுகள் இடம்பெற்றதாக நினைவில் இல்லை.

ஆனால், பலஸ்தீனத்தில் கொல்லப்படுகின்ற மக்களுக்காக இலங்கை முஸ்லிம்கள் அரசியலமைப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தின் கீழ் எடுக்கின்ற நடவடிக்கைகள் ஒரு கைதுக்கு காரணமாக ஆகி விடுகின்றது என்பது தான், ஆட்சியாளர்களின் நியாயத்தின் பக்கம் நிற்கும் நிலைப்பாடு பற்றிய பல கேள்விகளை எழுப்புகின்றது.

எல்லோரும் இந்த நாட்டில் சமமாக நடத்தப்படுவார்கள் என்று கூறியே என்.பி.பி. கட்சி ஆட்சியைப் பிடித்தது. பயங்கரவாத தடைச் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட கட்சி என்ற அடிப்படையில், இதனை நீக்க வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணி குரல் கொடுத்து வந்ததும் நினைவிருக்கின்றது.

"தாம் ஆட்சிக்கு வந்தால் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவோம்" என்று இவர்கள் மக்கள் மன்றத்தில் கூறினர். ஆனால், அதிகாரத்திற்கு வந்த பிறகு அந்த வாக்குறுதியை நிறைவேற்ற முயற்சிப்பதாக அரசு ஒரு தோற்றப்பாட்டை உருவாக்கியிருந்தாலும், அந்த சட்டத்தின் பிரயோகம் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

இது ஒரு முரண் நகையாகும். அதிகாரத்திற்கு வந்த பிறகு இந்த அரசாங்கமும் பயங்கரவாத தடைச் சட்டம் அல்லது அதற்கு ஒப்பான ஒரு சட்ட ஏற்பாடு கைவசம் இருப்பதை விரும்புவதைப் போலவே தோன்றுவதாகக் குறிப்பாக தமிழ் அரசியல்வாதிகள் விமர்சித்து வருகின்றார்கள்.

இந்நிலையிலேயே, இஸ்ரேலுக்கு எதிராக ஸ்டிக்கரை ஒட்டிய ஒரு இளைஞன் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைப் பேரவை அமர்வின் சூடு ஆறுவதற்கிடையில், பிரித்தானியா அரசாங்கம் முன்னாள் தளபதிகள் மூவருக்குத் தடை விதித்துள்ள நிலையில். சட்டம் தன் கடமையைச் செய்துள்ளது.

நாட்டில் பயங்கரவாத தடைச் சட்டம் அமுலில் இருக்கின்றது. சந்தேகத்திற்கிடமான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கும் உள்ளது. எனவே, எடுத்த எடுப்பில் அரசாங்கத்தை விமர்சிக்க முடியாது. சில நடவடிக்கைகளுக்கு முஸ்லிம் சமூகம் ஒத்துழைப்பு வழங்கவும் வேண்டும்.

ஆனால், முஸ்லிம்களுக்கு இப்படியொரு கேள்வி எழுவதற்கு இந்த கைது மட்டுமே ஒரு காரணமல்ல. வேறு பல காரணங்கள் உள்ளன.

அண்மைக்காலமாக இஸ்ரேலியர்களின் போக்குகள் இலங்கையில் வித்தியாசமாகத் தெரிகின்றன. அவர்கள் வெறுமனே சுற்றுலாப் பயணிகளாக வருகின்றார்கள் என்று கூறப்பட்டாலும், பல இடங்களில் வேறு நபர்களின் பெயர்களில் காணிகளை வாங்கி மறைமுகமாகக் காலூன்ற முயல்வதாகப் பல செய்திகள் வெளியாகியிருந்தன.

குறிப்பாக, முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பொத்துவில் உல்லை பிரதேசத்தில் இஸ்ரேலிய வழிபாட்டுத்தலம் ஒன்று இயங்குகின்றது. அதனை இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்தப்படவுள்ளதாக சில நாட்களுக்கு முன்னர் பதற்ற நிலைமை ஒன்று ஏற்பட்டது.

அதன் பிறகு, பொத்துவிலில் மட்டுமன்றி, கொழும்பின் மையப் பகுதியிலும், தெஹிவளை போன்ற புறநகர்ப் பகுதிகளிலும் யூதர்கள் கட்டிடங்களை அமைப்பதாகவும் அவற்றுக்கு அரச படையினர் பாதுகாப்பு வழங்குவதாகவும் ஏகப்பட்ட தகவல்கள் பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தப்பட்டன.

அரேபிய நிலப்பரப்பில் அடைக்கலம் கொடுத்த பலஸ்தீன மண்ணை, யூதர்கள் மெல்ல மெல்ல ஆக்கிரமித்தே இஸ்ரேல் என்ற நாட்டை உருவாக்கினர் என்பது யாவரும் அறிந்ததே. அப்படியிருந்தும் கூட, இஸ்ரேலியர்கள் காலூன்றும் முயற்சிகள் தடுக்கப்படவில்லை என்றே முஜிபுர் ரஹ்மான் போன்ற முஸ்லிம் எம்.பிக்கள் முன்வைக்கின்ற குற்றச்சாட்டாகும்.

இதேவேளை, இஸ்ரேலுக்கு எதிரான அல்லது போர் நிறுத்தத்தை வலியுறுத்தும் அறிவிப்பொன்றை அரசாங்கம் உத்தியோகப்பூர்வமாக வெளியிட வேண்டும் என்று கோரப்பட்டது.

இந்நிலையில், 'காசாவில் நிலவும் நிலைமை குறித்து இலங்கை ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதுடன், இந்நிலைமையை மேலும் மோசமடையச் செய்யும் எந்தவொரு நடவடிக்கையும் தவிர்க்கப்படவேண்டுமென அனைத்து தரப்பினரையும் இலங்கை கேட்டுக்கொள்கிறது' என்ற ஒரு அறிக்கையை அரசாங்கம் வெளியிட்டதும் நினைவு கொள்ளத்தக்கது

இலங்கை வரும் இஸ்ரேலியர்கள் உள்ளிட்ட சுற்றுலாப் பயணிகளைப் பாதுகாக்க வேண்டும் என்று அரசாங்கம் கூறுவதை யாரும் மறுக்கவில்லை. ஆனால், முஸ்லிம்களும் ஏனைய இனங்களைச் சேர்ந்த மக்களும் ஐக்கியத்தோடு வாழ்கின்ற நாட்டில், இஸ்ரேலியர்கள் மறைமுகமாக முற்படுவதைத் தடுக்க வேண்டும் என்றே இங்கு கோரப்படுகின்றது.

இதற்கு அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன?

கடந்த காலங்களில் பலஸ்தீனம் தொடர்பாகக் கொண்டிருந்த நிலைப்பாடுகள் மாறி வருகின்றதா என்ற சந்தேகத்தை அரச இயந்திரத்தின் சில நடவடிக்கைகள் ஏற்படுத்துவதாக விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.


இஸ்ரேல் போர் நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, பலஸ்தீனத்தில் தாக்குதலைத் தொடங்கிய ஒரு சில நாட்களுக்குள்ளேயே 700 அப்பாவி முஸ்லிம்களை இஸ்ரேல் படுகொலை செய்துள்ளது. இதில் கணிசமானவர்கள் 18 வயதிற்கு குறைந்தவர்களும் சிறுவர்களும் ஆவர்.

இப்படியாக மொத்தமாக 50 ஆயிரம் பேர் தங்களது சொந்த நிலத்தில் இஸ்ரேலிய படைகளால் கொல்லப்பட்டுள்ளார்.

அகதிகளாக்கப்பட்டவர்கள், அநாதையாக்கப்பட்டவர்கள், ஊனமுற்றோருக்குக் கணக்கில்லை. எனவே, இதனை இன்று உலகில் உள்ள மனிதநேயமுள்ள அனைவரும் எதிர்க்கும் போது, இலங்கை முஸ்லிம்கள் இந்த அழிச்சாட்டியத்தை விமர்சிப்பதைத் தவறான கண்ணோட்டத்தில் பார்க்க முடியுமா?

நாட்டில் நல்ல விடயங்கள் நடக்கின்ற போது, அதனை அரசாங்கம் செய்தது என்றும். தவறான காரியங்களுக்காக விமர்சனங்கள் எழுகின்ற போது அதனை அதிகாரிகள் செய்து விட்டார்கள் என்றும் கூறி மழுப்ப முடியாது.

ஒரு காலத்தில் பலஸ்தீன மக்களுக்காக முன்னிற்போம் என்று கூறியவர்கள், இப்போது அவ்வாறு செயற்பட முடியாத நிலைக்கு அல்லது இலங்கை முஸ்லிம்கள் இஸ்ரேலுக்கு எதிராகக் குரல் கொடுப்பதை விரும்ப முடியாத இக்கட்டுக்குள் சிக்கிக் கொண்டுள்ளனரா என்ற கேள்விக்கு அவர்கள்தான் விடையளிக்க வேண்டும்.



## வாழ்வியல் தரிசனம்

தாங்கள் கேட்டதைத்தான் மக்கள் கேட்டு நடக்க வேண்டும் என, எந்த அரசாங்கமும் நினைக்கக் கூடாது. புத்திசாலிகள், பலசாலிகள், மேதாவிகள், ஆன்மிகவாதிகள், பல மொழி, மதம், இனம், நிறங்களைக் கொண்டது இந்த உலகம்.

இவ்வாறிருக்க, சிலரின் அரசியல் முறைமைகளை மக்கள் விரும்புவதில்லை. ஆனால், பல நாடுகள் பேதங்களை மறந்து, சகலரையும் இணைத்துக்கொண்டு, சுதந்திரமாக வாழும் போக்கைக் கடைப்பிடிக்கின்றன. அதனால்தான், இத்தகைய நாடுகள், மிகவும் அதிசயிக்கத்தக்க வளர்ச்சியை அடைந்துள்ளன. தகுதியுடையவர் எவரோ, அவரை ஏற்றுக்கொள்கிறார்கள். மிகப்பெரும் வல்லரசு நாடுகளின் ஆட்சியின் தலைமைத்துவத்தில், சிறுபான்மைச் சமூகங்களுக்கும் இடமளிக்கப்படுகின்றது.

தேசம் உயர்வடைய வேண்டும் என்பதே, அரசின் குறிக்கோளாக இருக்கவேண்டும். "இது எனது தேசம்" என, இறுமாப்புடன் அனைவரும் சொல்ல வேண்டும்.

தாய் மண்ணில், அனைவரும் ஒரே பிள்ளைகள் ஆவோம். பேதம், குரோதம் சரிந்து அழிந்தாலேயே, உலகின் உயிர்ப்பை மக்கள் தரிசிக்க முடியும். கடவுள் உருவாக்கிய உலகைக் கரைக்க எண்ணலாகாது.

- பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### விதானையாளரை நியமிக்குமாறு கோரிக்கை

நோர்வூட் பிரதேச செயலகத்தால் நிர்வகிக்கப்படும் மஸ்கெலியா, ப்ரௌன்லோ கிராம அலுவலர் பிரிவுக்கு புதிய கிராம சேவகரை (விதானையாளர்) நியமிக்கக் கோரி, ப்ரௌன்லோ தேயிலைத் தோட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள், செவ்வாய்க்கிழமை(25) காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தற்போது, ப்ரௌன்லோ கிராம அலுவலர் பிரிவின் பதில் கிராம அலுவலராகப் பணி புரிவது, மஸ்கெலியா பிரிவின் கிராம அலுவலர் என தெரிவிக்கப்படுகிறது.

மஸ்கெலியா கிராம அலுவலர் பிரிவில் சுமார் 5,000 பேரும், ப்ரௌன்லோ பிரிவில் சுமார் 7,000 பேரும் உள்ளதாகவும், இந்த இரண்டு பிரிவுகளிலும் சுமார் 3,400 குடும்பங்களுக்கு ஒரு கிராம அலுவலர் பணியமர்த்தப்படுவது நியாயமானதல்ல என்றும் மக்கள் தெரிவித்தனர்.

வாரத்தில் ஒரு நாள் மட்டுமே பதில் கிராம அலுவலர், அலுவலகத்தில் பணிபுரிவதாக சுட்டிக்காட்டும் அவர்கள், சுமார் 3 வருடங்களாக நீடிக்கும் இந்தப் பிரச்சினை குறித்து நோர்வூட் பிரதேச செயலக அதிகாரிகளுக்கு வாய்மொழியாக மற்றும் எழுத்துப்பூர்வமாக அறிவித்துள்ளதாகவும், இதுவரை ப்ரௌன்லோபிரிவுக்கு நிரந்தர கிராம அலுவலர் ஒருவரை வழங்காததால், தோட்டத் தொழிலாளர்கள் உட்பட ஏராளமானோர் பெரும் சிரமத்திற்கு ஆளாகி வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

- காமினி பண்டார



# நோன்பு பெருநாள் தொழுகை...

‘ஈதுல் அல்ஹா’ புனித நோன்பு பெருநாள் தொழுகைகள் இலங்கையின் பல்வேறு இடங்களில் திங்கட்கிழமை(31) அன்று சிறப்பாக நடைபெற்றன.

- தமிழ்மிரர் நிருபர்கள்

## அம்பாறையில்...





## ஹட்டனில்...





## செம்மண்ணோடையில்...





## கிண்ணியாவில்...



## முள்ளிப்பொத்தானையில்...






## கல்முனையில்...



## மட்டக்களப்பில்...



## மாளிகைக்காடுவில்...



## சாய்ந்தமருதில்...





## கற்பிட்டியில்...





## வவுனியாவில்...



# ‘ஏப்ரல் பூல்’

உங்கள் கண்களைச் சிவக்க செய்த ஏப்ரல் முட்டாளின் நகைச்சுவைக்கு நீங்கள் எப்போதாவது பலியாகி இருக்கிறீர்களா? ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 1ஆம் திகதி வரும் ஏப்ரல் முட்டாள்கள் தினத்தை அர்த்தமுள்ள வகையில் கொண்டாட உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான மக்கள் உற்சாகமாக உள்ளனர். இந்த நாள் பல்வேறு புரளிகளைப் பரப்புதல், நம்பமுடியாத நிகழ்வுகளை நம்பக்கூடியதாக மாற்றுதல், நண்பர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவிப்பது போன்ற நடைமுறை நகைச்சுவைகளால் நிறைந்துள்ளது.

உலக அளவில் மகளிர் தினம், நண்பர்கள் தினம், தந்தையர் தினம், காதலர் தினம், குழந்தைகள் தினம், தொழிலாளர்கள் தினம் என்று மக்களுக்குப் பலவிதமான தினங்கள் இருப்பது போலவே முட்டாள்களுக்கும் என்று ஒரு தினம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் ஏனைய தினங்களுக்கு உரிமை கொண்டாடுவதை போல, இத்தினத்தில் தமக்கும் பங்கிருப்பதாகச் சொல்லிக் கொள்ள எவரும் முன்வருவதில்லை.

முட்டாள்கள் தினம் எப்போது தொடங்கியது என்பதற்கு இன்னும் உறுதியான பதிலைக் கொடுக்க முடியாது. உலகப் புகழ்பெற்ற ஊடக நிறுவனங்கள், உலகப் புகழ்பெற்ற பிராண்டுகள், பல்வேறு தனி நபர்கள் மற்றும் நன்கு அறியப்பட்ட தொழில்நுட்ப நிறுவனங்கள் ஏப்ரல் முட்டாள் தினத்தை எவ்வாறு கொண்டாடின என்பதை பற்றிய ஒரு பார்வை கீழே உள்ளது.

அதே நேரம், தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளாமல் அடுத்தவரை முட்டாளாக்க முனையும் ‘முட்டாள்தனமான அறிவாளிகளின் தினம்’ என்று இன்றைய தினத்தைக் கூறினாலும் பிழையாகாது. ஆம்.. நாமெல்லாம் பள்ளிப் பருவத்தில், சக நண்பர்களிடம், வீட்டில் உள்ளவர்களிடம் அன்று ஏமாறாமல் இருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்ட நாட்களை மறக்க முடியாது.

அதேபோல, ஒருவரையாவது ஏமாற்றி விட வேண்டும் என்ற விளையாட்டுத் தனமும் அதில் இருந்த ஆர்வமும் மறக்க முடியாது. “உன் சட்டையிலே என்ன கற? உன் பின்னே பாம்பு..?” என்று ஆரம்பித்துப் பல ஏமாற்றுக் கேள்விகளை நண்பர்களிடம் சொல்லி... ஏமாற்றி விளையாடி இருப்போம். அதுதான் இந்த ஏப்ரல் முதல் தேதியாகும். ஏமாற்றுவதையும் ஏமாறுவதையும் சிரித்துக் கொண்டே ஏற்றுக்கொள்ளும் ஒரு தினம்.

உலகம் முழுவதும் பலரைக் குழந்தைப் பருவத்துக்கு அழைத்துச் செல்லும் இன்றைய தினம், எப்படி உருவானது? அதன் வரலாற்றுப் பின்னணியில் பல கதைகள் உண்டு. 1,500களில் ஐரோப்பியர்கள் கடைப்பிடித்த ஒரு பழக்கமாக ஏப்ரல் 1 கூறப்படுகிறது.

அப்போது, அந்த நாளின் பெயர் ஏப்ரல் மீன்கள் தினம். ஏப்ரல் மாதத் தொடக்கத்தில் பிரான்ஸ்ஸில் உள்ள ஆறுகளிலும் நீரோடைகளிலும் நிறைய மீன்கள் இருக்குமாம். அதனால் அந்தச் சமயத்தில் மீன்பிடிப்பது மிகவும் சுலபம். ஆகையால் மீன்கள் ஏமாறும் தினமாக ஏப்ரல் 1 கருதப்பட்டது.

காலப்போக்கில் மனிதர்களை ஏமாற்றும் தினமாக அது மாற்றம் கண்டதாம். ஏப்ரல் 1ஆம் திகதி, முட்டாள்கள் தினம் என ஆனது.

புராதன வரலாற்றில் ரோமானிய நாட்காட்டியின்படி ஏப்ரல் 1ஆம் திகதிதான் வசந்தம் ஆரம்பிக்கும் பொன்னாளாகும். புராதன வரலாற்றில் புத்தாண்டுக் கொண்டாட்டங்களை மிகுந்த உற்சாகத்தோடு கொண்டாடியதற்கான வரலாற்றுக் குறிப்புகள் காணப்படுகின்றன.

ஹார்வி என்னும் வரலாற்றாய்வாளர் தனது குறிப்பில், பிரான்ஸ் தேசத்தின் அரசன் ஒன்பதாம் சார்லஸ் காலத்தில் மார்ச் மாதம் 25ஆம் திகதியிலிருந்து ஒரு வார காலம் புத்தாண்டுக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டதாகக் குறிப்பிடுகிறார். திருவிழாவைப் போல் நடைபெறும் இந்தக் கொண்டாட்டங்களின்போது ஒருவருக்கொருவர் பரிசுப் பொருள்களையும், அன்பளிப்புகளையும் வழங்கி தங்கள் அன்பை வெளிப்படுத்திக் கொண்டதாகக் குறிப்பிடுகிறார். இந்த ஒரு வாரக் கொண்டாட்டத்தின் இறுதி நாளான ஏப்ரல் முதலாம் திகதி பெருவிருந்துடன் புத்தாண்டு விழா நிறைவெய்தியதாகக் குறிப்பிட்டுள்ளார். 1562ஆம் ஆண்டில் போப் கிரிகோரி புதிய ஆண்டு தொடக்கத்தை நடைமுறைப்படுத்தும்படி அறிவித்தார். ஆண்டு தொடக்க நாளாக ஜனவரி 1ஆம் திகதியை அறிமுகம் செய்து வைத்தார்.

இனிமேல் பிரான்ஸ் தேசம் முழுமையும் இந்த நாட்காட்டிதான் என்று ஊர்தோறும் அறிவிக்கப்பட்டது. இந்த மாற்றத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள் அல்லது போப்பின் அறிவிப்பை நம்பாதவர்கள் ஏப்ரல் 1ஆம் திகதியையே புத்தாண்டுப் பிறப்பாகக் கொண்டாடினர். இந்தப் புதிய புத்தாண்டு தினத்தை ஐரோப்பியத் தேசங்களும், அவற்றின் மக்களும் உடனே ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்குச் சில காலம் எடுத்தது. அதற்குப் பல காரணங்கள் உண்டு.

அன்றைய காலகட்டத்தில் இதுபோன்ற செய்திகள் அல்லது மாற்றங்கள் சகலரையும் சென்றடைவதற்குரிய தகுந்த சாதனங்கள் இருக்கவில்லை. அத்தோடு, பழைய வழக்கத்தை புறம் தள்ளி புதிய வழக்கத்தை ஏற்றுக் கொள்வதையும் இம்மக்கள் மறுத்திருக்கலாம்.

ஆகவே, இம்மக்கள் தொடர்ந்தும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதியையே தமது புத்தாண்டுத் தினமாகக் கொண்டாடி வந்தார்கள். எவ்வாறாயினும் பிரான்ஸ் 1852ஆம் ஆண்டிலும் ஸ்காட்லாந்து 1660ஆம் ஆண்டிலும், ஜெர்மனி, டென்மார்க், நார்வே போன்ற நாடுகள் 1700ஆம் ஆண்டிலும், இங்கிலாந்து 1752ஆம் ஆண்டிலும், இந்தப் புதிய புத்தாண்டு தினத்தை அதிகாரப்பூர்வமாக ஏற்றுக் கொண்டன.

புதிய வழக்கத்தை ஏற்றுக்கொண்டு ஜனவரி முதலாம் திகதியைப் புத்தாண்டாகக் கொண்டாடத் தொடங்கிய மக்கள், இந்த பழைய வழக்கத்தைப் பேணி ஏப்ரல் மாதம் முதல் திகதியில் புத்தாண்டைக் கொண்டாடுபவர்களை ஏப்ரல் முட்டாள்கள் என்று அழைத்தார்கள். இதிலிருந்து ஏப்ரல் முட்டாள்கள் தினம் ஆரம்பமாயிற்று என்பது பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக ஆய்வு ஒன்று தெரிவிக்கின்றது.

என்றாலும் 1582ஆம் ஆண்டுக்கு முன்னரேயே 1508ஆம் ஆண்டில் பிரான்ஸ் தேசத்தில் முட்டாள்கள் தினம் கொண்டாடப்பட்டு வந்துள்ளது என்பதற்கு சான்றுகள் உண்டு. அதேபோல, டச்சு மொழியிலும் 1539ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் முட்டாள்கள் தினம் பற்றிச் சொல்லப்பட்டிருப்பதை அறியக் கூடியதாக உள்ளது.

1466ஆம் ஆண்டு மன்னன் பிலிப்பை அவரது அரச சபை விகடகவி, பந்தயம் ஒன்றில் வென்று மன்னனையே முட்டாளாக்கிய நாள் ஏப்ரல் முதலாம் தினம் என்றும் கூறப்படுகிறது. ரோமாபுரியில் கிறிஸ்தவர்கள் அதிகாரத்திற்கு வந்தபோது, நடைமுறைகளை மாற்றினார்கள். தற்போதுள்ள ஈஸ்டர் பண்டிகையினையும் மாற்றி அறிவித்தார்கள். பழைமையான கொண்டாட்டங்களை மாற்றியதோடு அவற்றில் ஒரு சிலவற்றை வேடிக்கை, வினோத கொண்டாட்டங்களுக்குரிய நாளாக மாற்றினர்.

இந்த மாற்றங்களில் நம்பிக்கை இல்லாமலிருந்த இவர்களைக் கேலியும் கிண்டலும் செய்து விளையாட்டாக முட்டாளாக்கி ஏமாற்றும் போக்கில் ஈடுபட்டனர். இதுவே நாம் இன்றைக்கு வேடிக்கையாய் முட்டாள்களாக்கி மகிழ்கிற நாளாகத் தொடர்ந்திருக்கிறது எனலாம். ஜனவரி மாதம் 1ஆம் திகதியைப் புத்தாண்டாக ஏற்றுக்கொள்ள மறுத்தவர்கள் அல்லது மறந்தவர்களுக்கு முட்டாள்தனமான பரிசுகளை அனுப்பினர். பெரிய பரிசுக் கூடைகள் போன்று வடிவமைத்து உள்ளே குதிரை முடி, பழைய குப்பை என்று நிரப்பிக் கொடுத்து ஏமாற்றுதல் போன்ற ஏமாற்று வேலைகளைச் செய்து ஏமாற வைத்தனர். இதை நம்பும்படியான ஆனால், நகைக்கும்படியான செயலாக செய்து மகிழ்ந்தனர்.

இத்தகைய கேலிக்கூத்துகள் சுற்றிச் சுழன்று பிரான்ஸிலிருந்து இங்கிலாந்துக்கும் அங்கிருந்து அமெரிக்காவுக்கும் ‘ஏப்ரல் பூல்’ விரிந்து பரவி இருக்கிறது. இது குறித்து சிகாகோவில் உள்ள இலினாய்ஸ் பல்கலைக்கழக வரலாற்றுப் பேராசிரியர் ஸ்டீவன் பேன்னிங் ஐரோப்பாவில் எப்படி எல்லாம் நடந்தது என்று விலாவாரியாகக் குறிப்பிட்டுள்ளார்.

பிரெஞ்சுக் குழந்தைகள் கூட காகிதத்தில் மீன் போன்று செய்து தனது நண்பர்களின் முதுகில் ஒட்டி அனுப்பிக் கேலி செய்திருக்கின்றனர். இப்படி முதுகில் மீனோடு திரிகிற குழந்தைகளைப் பார்க்கும் குழந்தைகள் ‘ஏப்ரல் மீன்’ என்று அழைத்துக் கேலி செய்திருந்திருக்கின்றனர்.

1986இல் ப்ரெட் வால்டன் இயக்கிய, ‘ஏப்ரல் பூல்ஸ் டே’ திரைப்படம் மிகப் பிரபலமானது. டெபோரா போர்மேன், ஜேய் பேக்கர், டெபோரா குட்ரிச் நடித்திருந்தனர். பாரமவுன்ட் பிக்சர்ஸ் நிறுவனத்தார் பிரம்மாண்டமாக தயாரித்திருந்த இப்படம் ஒளி நாடாக்களிலும் வீரநடை போட்டு வந்ததைக் குறிப்பாகச் சொல்லலாம். ஏப்ரல் முதல் திகதி பல வேடிக்கைகள் மட்டுமல்லாது, பல வினைகளும் வந்துள்ளன. தற்போது ஊரடங்கு அமலில் உள்ள நிலையில் வீட்டுக்குள்ளேயே குழந்தைகளுடன் ‘ஏப்ரல் பூல்...’ யாரிடமும் ஏமாறாமல் விளையாடுங்கள்..!

பொய் சொல்வது எளிது. பொய்களை நம்புவது எளிது. ஆனால் நீங்கள் சொல்லும் ஒரு பொய் உண்மையிலேயே ஒருவரின் உணர்வுகளைப் புண்படுத்தினால், அதை நகைச்சுவை என்று நினைக்காதீர்கள். ஒருவேளை, என் வாழ்நாள் முழுவதும் உன் முகத்தை நான் மீண்டும் பார்க்கவே முடியாது. சில பொய்கள் சட்டச் சிக்கல்களுக்கும் வழிவகுக்கும். ஒரு பொய்யைச் சொல்லிக் கேள்வி எழுப்புவதில் எந்தப் பயனும் இல்லை என்று நீங்கள் நினைத்தால், தேவையற்ற பொய்களைச் சொல்வதையும் சாக்குப்போக்குகளைச் சொல்வதையும் நிறுத்துங்கள். ஏனென்றால், வருடத்தின் ஒரு நாள் மட்டும், அந்த வருடம் முழுவதும் உள்ள அனைத்து நல்ல விஷயங்களையும் அழித்துவிடும். பாலில் ஒரு துளி சாணம் விழுந்தது போல இருக்கிறது.

எனவே, இதையெல்லாம் யோசித்துப் பார்த்தால், இன்று பொய் சொல்லப் போகிறவர்களும், பொய்யைக் கேட்கப் போகிறவர்களும், அன்றைய நாளை மிகவும் கவனமாக முடிக்க வேண்டும்.

(நன்றி இணையம்)





மியன்மார்

# மியன்மாரில் பிணவாடை

மியன்மாரில் கட்டிட இடிபாடுகளை அகற்றி மீட்புப்பணிகள் தீவிரமாக நடந்து வரும் நிலையில், தோண்ட, தோண்ட சடலங்கள் தொடர்ந்து மீட்கப்பட்டு வருகின்றன.

இடிபாடுகளில் இன்னும் பலர் சிக்கியுள்ளதாகத் தெரிகிறது. தொடர்ந்து மீட்புப் பணிகள் நடந்து வருவதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.



மீட்புப்பணிகளில் பொதுமக்களும் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களில் பலர் வெறும் கைகளால் இடிபாடுகளை அகற்றி உதவி செய்து வருகிறார்கள்.

காயம் அடைந்தவர்களால் வைத்தியசாலைகள் நிரம்பி வழிகின்றன. இதனால் பல பகுதிகளில் தற்காலிக வைத்தியசாலைகள் அமைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

நிலநடுக்கத்தால் முக்கியமான உள்கட்டமைப்புகள் சேதமடைந்து உள்ளதால் மியன்மாரின் பல பகுதிகளுக்கு உதவிகள் சென்றடைவது தடைப்பட்டுள்ளது.

இதற்கிடையே மியன்மாரில் கடுமையான மருந்து பற்றாக்குறை ஏற்பட வாய்ப்பு உள்ளதாக ஐ.நா. எச்சரித்துள்ளது. இது நிவாரணப் பணிகளை மேலும் பாதிக்கும் என்று உதவிக் குழுக்கள் கவலை தெரிவித்துள்ளன.

மியன்மாரில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்ட பிறகு நில அதிர்வுகள் உண்டானது. இதனால் பீதியடைந்துள்ள மக்கள் தெருக்களிலோ அல்லது திறந்த வெளிகளிலோ இரவுகளைக் கழிக்கின்றனர். பலர் வீடுகளை இழந்து என்ன செய்வது என்று தெரியாமல் தவித்து வருகிறார்கள்.

இந்த நிலையில் இராணுவ அரசாங்கத்துக்கு எதிராகச் செயல்படும் மியன்மாரின் நிழல் தேசிய ஒற்றுமை அரசாங்கத்தின் ஆயுதப் பிரிவான மக்கள் பாதுகாப்புப்படை, 2 வாரகால போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளது.

நிலநடுக்க மீட்புப்பணிகளை எளிதாக்கும் வகையில் சண்டை நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் தாங்கள் கட்டுப்படுத்தும் பகுதிகளில் பாதுகாப்பு, போக்குவரத்து மற்றும் தற்காலிக மீட்பு மற்றும் மருத்துவ முகாம்களை நிறுவுவதை உறுதி செய்ய ஐ.நா. மற்றும் அரசு சாரா அமைப்புகளுடன் ஒத்துழைக்கும் என்றும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மியன்மாரை மையமாகக் கொண்டு ஏற்பட்ட நிலநடுக்கம், தாய்லாந்தையும் தாக்கியது. தலைநகர் பாங்காங்கில் புதிதாகக் கட்டப்பட்டு வந்த 33 மாடிக் கட்டிடம் இடிந்து விழுந்தது. இதில் ஏராளமான தொழிலாளர்கள் சிக்கிக் கொண்டனர்.

அவர்களை மீட்கும் பணி நடந்து வருகிறது. தாய்லாந்தில் பலி எண்ணிக்கை 17 ஆக உயர்ந்தது. இன்னும் 90 பேர் மாயமாகி உள்ளனர்.

ஈரான்

# ட்ரம்பின் மிரட்டலுக்கு ஈரான் பதிலடி



ஈரான் அணு ஆயுதங்களை தயாரிப்பதற்கு தடைவிதிக்கும் விதமாக புதிய அணுசக்தி ஒப்பந்தத்துக்கான பேச்சுவார்த்தை நடத்த வலியுறுத்தி ஈரானுக்கு ட்ரம்ப் கடிதம் எழுதியிருந்தார்.

அதில், அமெரிக்காவுடனான நேரடி ஒப்பந்தத்திற்கு ஈரான் முன்வரவேண்டும் என கூறியிருந்தார். அமெரிக்காவுடனான ஒப்பந்தத்துக்கு மறுப்பு தெரிவித்தால் ஈரான் மீது கடுமையான தடைகள் விதிக்கப்படும் எனவும் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

ட்ரம்பின் இந்த கடிதத்துக்குப் பதில் அளித்த ஈரான் நாட்டின் ஜனாதிபதி மசூத் பெசஸ்கியான்,

“அமெரிக்கா உத்தரவுகள் வழங்குவதையும், எச்சரிக்கை விடுப்பதையும் ஏற்றுக்கொள்ள முடியாது. நாங்கள் ஒருபோதும் உங்களிடம் (அமெரிக்கா) நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்த மாட்டோம். அதேசமயம் மத்தியஸ்தர்கள் மூலம் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருக்கிறோம்’ என்று பதிலடி கொடுத்துள்ளார்.

மேலும் ஓமன் மூலமாக ஈரான் அரசாங்கம் ட்ரம்புக்கு பதில் கடிதமும் அனுப்பி உள்ளது. அதில், அதிகபட்ச அழுத்தம் மற்றும் இராணுவ அச்சுறுத்தல்களின் கீழ் அமெரிக்காவுடன் நேரடி பேச்சுவார்த்தைகளில் ஈடுபடக்கூடாது என்பதே தங்கள் நாட்டின் கொள்கை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேரடி பேச்சுவார்த்தையை ஈரான் நிராகரித்தது, ட்ரம்புக்கு கடும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு செய்தது போல் நான் அவர்களுக்கு இரண்டாம் நிலை வரிகளை விதிக்க வாய்ப்பு உள்ளது என்றும் ட்ரம்ப் கூறியுள்ளார்.

ட்ரம்ப் இவ்வாறு கூறிய சில மணி நேரங்களில் ஈரான் தனது செயல்பாடுகள் மூலம் பதில் அளித்துள்ளது. அதாவது ஏவுகணைகளைத் தயார்நிலையில் வைக்கத் தொடங்கியிருக்கிறது.

உலகெங்கிலும் அமெரிக்காவுடன் தொடர்புடைய நிலைகளைக் குறிவைத்துத் தாக்கும் திறனைக் கொண்ட ஏவுகணைகளை ஈரான் இராணுவம் தயார் நிலையில் வைத்துள்ளதாக, அரசு ஊடகமாக தெஹ்ரான் டைம்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

ஏவுதலுக்குத் தயார்நிலையில் உள்ள ஏவுகணைகளில் பெரும்பாலான ஏவுகணைகள், நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் உள்ள நிலத்தடி வசதிகளில் அமைந்துள்ளன என்றும், அவை வான்வழித் தாக்குதல்களைத் தாங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன என்றும் தகவல் வெளியாகி உள்ளது. அணு ஆயுத ஒப்பந்த விவகாரத்தில் அமெரிக்காவும் ஈரானும் தங்கள் நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பதால் பதற்றம் அதிகரித்துள்ளது.

இமாச்சல பிரதேசம்

# நிலச்சரிவில் 6 பேர் உயிரிழப்பு



இமாச்சலப் பிரதேசத்தில் ஏற்பட்ட இந்த நிலச்சரிவில் 3 பெண்கள் உட்பட 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

இமாச்சலின் குருத்வாரா மணிகரன் சாகிப் எதிரே இருக்கக்கூடிய குல்லு பகுதிக்கு ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருவது வழக்கம்.

ஞாயிற்றுக்கிழமை (30), என்பதால் நிறைய சுற்றுலாப் பயணிகள் வந்திருந்தனர்.

இந்த நிலையில் திடீரென அப்பகுதியில் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் 3 பெண்கள் உள்பட 6 பேர் தற்போது வரை உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் காயமடைந்தனர்.

நிலச்சரிவுடன் சேர்ந்து செடிகள் மற்றும் மரங்களும் வேரோடு சாய்ந்ததால் சாலைகளில் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது.

உடனடியாக சக சுற்றுலாப் பயணிகள் மற்றும் உள்ளூர் மக்கள் இணைந்து இந்த நிலச்சரிவை அகற்றக்கூடிய பணியிலும் இதில் சிக்கி இருக்கக்கூடிய நபர்களை மீட்கும் பணியிலும் ஈடுபட்டு வருகின்றனர்.



## இத்தாலிய சீரி ஏ தொடர்:

# ஏ.சி மிலனை வென்றது நாப்போலி

இத்தாலிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், தமது மைதானத்தில் திங்கட்கிழமை (31) அதிகாலை நடைபெற்ற ஏ.சி மிலனுடனான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் நாப்போலி வென்றது.

நாப்போலி சார்பாக மட்டியோ பொலிட்டானோ, றொமெலு லுக்காக்கு ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, மிலன் சார்பாகப் பெறப்பட்ட கோலை லூகா ஜோக்கோவிச் பெற்றிருந்தார்.

இதேவேளை, பியொரென்டினாவின் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை(30) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் அத்லாண்டா தோற்றது. பியொரென்டினா சார்பாகப் பெறப்பட்ட கோலை மொய்ஸே கீன் பெற்றிருந்தார்.

சீரி ஏ புள்ளிகள் பட்டியலில் 67 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான இன்டர் மிலன் காணப்படுகின்றது.

64 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் நாப்போலியும், 58 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் அத்லாண்டாவும், 56 புள்ளிகளுடன் நான்காம் இடத்தில் பொலொக்னாவும் காணப்படுகின்றன.



## ஐ.பி.எல்.:

# சென்னையை வென்றது ராஜஸ்தான்

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), குவஹாத்தியில் ஞாயிற்றுக்கிழமை(30) நடைபெற்ற சென்னை சுப்பர் கிங்ஸுடனான போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: சென்னை

ராஜஸ்தான்: 182/9 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: நிதிஷ் ரானா 81 (36), ரியான் பராக் 37 (28), சஞ்சு சாம்சன் 20 (16), ஷிம்ரோன் ஹெட்மயர் 19 (16) ஓட்டங்கள். பந்துவீச்சு: மதீஷ பத்திரண 2/28 [4], நூர் அஹ்மட் 2/28 [4], கலீல் அஹ்மட் 2/38 [4], இரவீந்திர ஜடேஜா 1/10 [2])

சென்னை: 176/6 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: ருத்துராஜ் கைகவாட் 63 (44), இரவீந்திர ஜடேஜா ஆ.இ 32 (22), ராகுல் ட்ரிபாதி 23 (19), ஷிவம் டுபே 18 (10), மகேந்திர சிங் டோணி 16 (11), ஜேமி ஒவெர்ட்டன் ஆ.இ 11 (04) ஓட்டங்கள். பந்துவீச்சு: வனிது ஹசரங்க 4/35 [4], ஜொஃப்ரா ஆர்ச்சர் 1/13 [3], மகேஷ் தீக்‌ஷன 0/30 [4])

போட்டியின் நாயகன்: நிதிஷ் ரானா

முன்னதாக விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற சண்றைசர்ஸ் ஹைதரபாத்துடனான போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸ் வென்றிருந்தது.

இதேவேளை லக்னோவில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் பஞ்சாப் கிங்ஸை லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.



# மியூனிச்சிலிருந்து வெளியேறும் மல்லர்?

ஜேர்மனிய பெண்டெலிஸ்கா கால்பந்தாட்டக் கழகமான பயெர்ண் மியூனிச்சின் முன்களவீரரான தோமஸ் மல்லருக்கு நடப்புப் பருவகாலத்தைத் தாண்டி அக்கழகம் புதியதொரு ஒப்பந்தத்தை வழங்காதெனத் தெரிய வருகிறது.

இந்நிலையில், ஐக்கிய அமெரிக்காவிலுள்ள கழகங்கள் 35 வயதான மல்லரைக் கைச்சாத்திட ஆர்வம் காட்டுகின்ற நிலையில், அவர் அங்கு செல்வாரெனக் கூறப்படுகிறது.

# தலைமைப் பயிற்சியாளர் லோவை



தலைமைப் பயிற்சியாளர் மார்கோ றோஸை ஜேர்மனிய புண்டெலிஸ்கா கால்பந்தாட்டக் கழகமான ஆர்.பி லெய்ஸிக் நீக்கியுள்ளது.

பொரூசியா மொச்சென்கிளெட்பாவுடனான பெண்டெலிஸ்கா போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்ததைத் தொடர்ந்தே றோஸை லெய்ப்ஸிக் நீக்கி இடைக்கால தலைமைப் பயிற்சியாளராக ஸொல்ட் லோவை நியமித்துள்ளது.

இரண்டரையாண்டுகள் லெய்ப்ஸிக்குடனிருந்து புண்டெலிஸ்கா புள்ளிகள் பட்டியலில் லெய்ப்ஸிக் ஆறாமிடத்தில் இருக்கையில் றோஸ் நீக்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான செல்சி, இன்னொரு புண்டெலிஸ்கா கழகமான பயேர்ண் மியூனிச், பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனில் தோமஸ் துஷெலின் துணைப் பயிற்சியாளராக லோ பணியாற்றியிருந்தார்.

# SLC க்கு மீண்டும் தலைவரானார் ஷம்மி சில்வா

2025-2027 காலகட்டத்திற்கு இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவராக ஷம்மி சில்வா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

நடந்து கொண்டிருக்கும் இலங்கை கிரிக்கெட் சபையின் 64ஆவது ஆண்டு பொதுக் கூட்டத்தின் போது அவர் போட்டியின்றி மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவரது மறுதேர்வை இலங்கை கிரிக்கெட் சபை தேர்தல் குழு உறுதி செய்தது.

இது அவர் தொடர்ந்து நான்காவது முறையாகப் பதவியேற்கிறார்.

அத்துடன், போட்டியின்றி இந்தப் பதவிக்கு மூன்றாவது முறையாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 01, ஏப்ரல் 2025, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு- 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.